அனுப்புநர்

முனைவர் மு. செல்வம்
முதல்வர்
மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும்
பயிற்சி நிறுவனம், நாமக்கல்.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
முதன்மைக் கல்வி அலுவலகங்கள்
அனைத்து மாவட்டங்கள்.

ந.க.எண் : 570/அ2/2026, நாள் : 19.02.2026

அய்யா / அம்மையீர்,

பொருள் : பள்ளிக் கல்வி – 2023-2024ஆம் கல்வியாண்டு அறிவிப்பு எண்.11, ஆசிரியர் தேர்வு வாரியத்தின் வாயிலாக தெரிவு செய்யப்பட்டு தற்போது பணி நியமனம் வழங்கப்பட்ட முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களுக்கான பயிற்சி - புதியதாக நியமனம் செய்யப்பட்ட உடற்கல்வி நிலை-1 (Physical Director Grade - 1) ஆசிரியர்களை பணிவிடுவிப்பு செய்யக் கோருதல் - சார்பு

பார்வை : சென்னை -06 மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் : 44750/எஃப்3/2024 நாள். 14 .02.2026.

-------

பார்வையில் காணும் இயக்குநர் அவர்களின் செயல்முறைகளுக்கிணங்க, புதியதாக நியமனம் செய்யப்பட்ட **உடற்கல்வி நிலை- 1** (Physical Director Grade - 1) ஆசிரியர்களுக்கு 23.02.2026 முதல் 25.02.2026 வரை மூன்று நாட்கள் உடற்கல்வி பாடத்திற்கு புகுநிலைப் பயிற்சியானது **நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, தோக்கவாடி, KSR College of Technology, MBA F Block இல்** நடைபெறவுள்ளது. மாவட்டங்களில் புதியதாக நியமனம் செய்யப்பட்ட முதுநிலை பட்டதாரி உடற்கல்வி ஆசிரியர்களை நிலை – 1 (Physical Director Grade - 1) அனைவரையும் உரிய நாளில் பயிற்சியில் கலந்துகொள்ள ஏதுவாக பணிவிடுவிப்புச் செய்ய சம்பந்தப்பட்ட தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேற்காண் ஆசிரியர்கள் பயிற்சிக்கு வரும்போது **T-Shirt, Track suit மற்றும் Shoes** உடன் வர அறிவுறுத்துமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஆசிரியர்களுக்கு **தங்குமிட வசதி ஈரோடு, பெருந்துறை ரோடு, குமலன்குட்டை, ஹோட்டல் ராயல் எம்பசியில் செய்யப்பட்டுள்ளது** என்பதையும், ஆசிரியர்கள் 22.02.2026 அன்று மாலை வந்து தங்குவதற்கு மேற்காண் ஹோட்டலில் வசதிகள் செய்யப்பட்டுள்ளது என்பதையும் கனிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயிற்சி ஒருங்கிணைப்பாளர் : இரா.முத்துகிருஷ்ணன். முதுநிலை விரிவுரையாளர் (9500981778 )
DIET, நாமக்கல்.

19.02.2026

முதல்வர்
மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும்
பயிற்சி நிறுவனம், நாமக்கல்.

19/02/26

நகல் : முதல்வர்கள், அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், தமிழ்நாடு – தகவலுக்காக அன்புடன் அனுப்பப்படுகிறது.

Scanned with OKEN Scanner